## திருவண்ணாமலையில் ரூ.37 கோடியில்

# 600 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் மினி டைடல் பூங்கா!

## மு.க.ஸ்டாலின் காணொலிமூலம் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, ஆக. 2 - தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் திருவண்ணாமலையில் ரூ.37 கோடி மதிப்பீட்டில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.8.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் திருவண்ணாமலையில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு 600 புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 63,200 சதுர அடி கட்டுமான பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்திட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இலக்கு நிர்ணயித்து, அதனை விரைவில் எய்திடும் வகையில் அதிக முதலீடுகளை ஈர்த்திடவும், தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. முதலீடுகளை ஈர்ப்பதிலும், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை, குறிப்பாக பெண்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுவதாக, ஒன்றிய அரசின் 2024 - 25 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

2000-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் சென்னை தரமணியில் டைடல் பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை மாபெரும் வளர்ச்சி பெற வித்திட்டது.

**'அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி'** என்பதை முக்கிய கொள்கையாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் பரவலாக விரிவுபடுத்தும் விதமாக, மதுரை மாநகரில் ரூ.314 கோடி மதிப்பீட்டில், 5.34 இலட்சம் சதுரடி கட்டுமான பரப்பளவுடனும், திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் ரூ.403 கோடி மதிப்பீட்டில், 5.58 இலட்சம் சதுர அடி கட்டுமான பரப்பளவுடனும், புதிய டைடல் பூங்காக்களை நிறுவ முதலமைச்சர் அவர்களால் 18.02.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இவற்றின் கட்டுமானப்பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

மேலும், 5.57 இலட்சம் சதுர அடி கட்டுமான பரப்பளவில், 21 தளங்களுடன் கட்டப்பட்ட பட்டாபிராம் டைடல் பூங்கா, முதலமைச்சர் அவர்களால் 22.11.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்களை மேலும் விரிவுபடுத்தும் வகையில், ஓசூரில் ரூ.400 கோடி செலவில் 5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் டைடல் பூங்கா உருவாக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் 6000 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வல்லுநர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

இவை மட்டுமின்றி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கவும், புத்தொழில்களை ஆதரிக்கவும், டைடல் நியோ லிமிடெட் என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தின் மூலம் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில், 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி கட்டுமான பரப்பளவுடன் மினி டைடல் பூங்காக்களை அமைக்க அரசு முடிவெடுத்து, விழுப்புரம் மற்றும் திருப்பூர் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு 24.6.2022 அன்றும், வேலூர் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு 18.02.2023 அன்றும், தூத்துக்குடி, தஞ்சாவூர், மற்றும் சேலம் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு 19.5.2023 அன்றும் முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அவற்றில் கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்று விழுப்புரம் மினி டைடல் பூங்கா 17.02.2024 அன்றும், தஞ்சாவூர் மற்றும் சேலம் மினி டைடல் பூங்காக்கள் 23.09.2024 அன்றும், தூத்துக்குடி மினி டைடல் பூங்கா 29.12.2024 அன்றும் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

திருப்பூர், வேலூர் மற்றும் காரைக்குடி மினி டைடல் பூங்காக் களின் கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவை விரைவில் செயல்பட துவங்கும். மேலும், நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கான வடிவமைப்பு பணிகள் முடிவுற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. விரைவில் இதற்கான பணிகள் தொடங்கப்படவுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, திருவண்ணாமலையில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 63,200 சதுர அடி கட்டுமான பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் அடிக்கல் நாட்டினார்.

இந்த மினி டைடல் பூங்காக்கள் மூலம் அப்பகுதிகளில் வசித்துவரும் பல்லாயிரக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அவர்கள் வசித்துவரும் மாவட்டங்களிலேயே தங்கி, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலை பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படுவதுடன், அப்பகுதிகள் சமூகபொருளாதார வளர்ச்சியடையவும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி மேம்படவும் வழிவகுக்கும்.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி. ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண்ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.8.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் திருவண்ணாமலையில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தகவல் தொழிற்நுட்ப வல்லுநர்களுக்கு 600 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் 63,200 சதுர அடி கட்டுமான பரப்பளவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# 99 அயலகத் தமிழ் இளைஞர்களுக்கு பயணக் குறிப்பு தொகுப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!... முதல் பக்கத் தொடர்ச்சி

திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் 24.05.2023 அன்று சிங்கப்பூரில் நடைபெற்ற தமிழ் கலை பண்பாட்டு நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின்படி, அயலகத்தில் வாழும் 18 முதல் 30 வயதுக்கு உட்பட்ட தமிழ் இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாட்டுக்கு அழைத்துவந்து, தமிழ் மற்றும் தமிழர்களின் பெருமிதங்களை உணரும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்று சிறப்புமிக்க இடங்களுக்கு, தமிழ்நாடு அரசு சார்பில் அழைத்துச் செல்லப்படுவர்.

அதன் அடிப்படையில், இந்த பண்பாட்டு பயணம் அயலகத் தமிழர் நலத்துறையினால் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 17 நாடுகளைச் சேர்ந்த 194 தமிழ் இளைஞர்களைக் கொண்ட மூன்று கட்ட பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, நடப்பு ஆண்டில் நான்காம் கட்ட பயணமாக, பிஜி, ரீயூனியன், மார்டினிக், குவாடலூப், இந்தோனேசியா, தென் ஆப்பிரிக்கா, மியான்மர், மொரிஷியஸ், மலேசியா, இலங்கை, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, கனடா மற்றும் ஜெர்மனி ஆகிய 14 நாடுகளைச் சேர்ந்த 99 அயலகத் தமிழ் இளைஞர்கள் இன்று முதல் (1.8.2025) 15.08.2025 வரையிலான பதினைந்து நாட்களுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

இப்பயணத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் தொடங்கி வைத்தார். இப்பயணத்தில் பங்குபெறும் அயலகத் தமிழ் இளைஞர்கள் அவர்களது நாட்டில் தமிழ்நாட்டின் கலாச்சார தூதுவர்களாக செயல்பட்டு தமிழர்களின் கலாச்சார பெருமைகளை அவர்களது நாடுகளில் பரப்புவர்.

இந்நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சிறப்புச் செயலாளர் சஜ்ஜன் சிங் ரா சவான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## வாக்காளர் பட்டியல் விவகாரம்!

# மக்களவையில் சிறப்பு விவாதம் நடத்தவேண்டும்!

## ராகுல் காந்தி – டி.ஆர்.பாலு கோரிக்கை மனு!

புதுடெல்லி, ஆக. 2 - வாக்காளர் பட்டியல் விவகாரத்தில் சிறப்பு விவாதம் நடத்தக்கோரி காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் மக்களவை சபாநாயகருக்கு கோரிக்கை மனு வழங்கி உள்ளனர்.

பீகாரை தொடர்ந்து வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை பல்வேறு மாநிலங்களிலும் மேற்கொள்ள தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. இந்த வாக்காளர் பட்டியல் விவகாரம் அனைத்து மாநிலங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என்பதால், தேர்தலுக்கு முன் சிறப்பு திருத்தம் மேற்கொள்வது கவலை அளிப்பதாக உள்ளதாக, எதிர்க்கட்சிகள் தெரிவித்து வருகின்றன.

இந்த விவகாரம் நாடு முழுவதுமான மிக முக்கிய பிரச்சினை என்பதால், கடந்த 20 ஆம் தேதி நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் விவாதம் வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது.

அப்போது, இந்த விவகாரம் தொடர்பாக அனைத்தும் விவாதிக்க அனுமதிக்கப்படும் என ஒன்றிய அரசு சார்பில் உறுதி அளிக்கப்பட்டது. ஆனால், இதுவரை விவாதம் நடத்த அனுமதி வழங்கப்படவில்லை.

இந்நிலையில், வாக்காளர் பட்டியல் விவகாரத்தில் சிறப்பு விவாதம் நடத்தக் கோரி காங்கிரஸ், தி.மு.க., சமாஜ்வாதி, திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சிகள் மக்களவை சபாநாய



கருக்கு கோரிக்கை மனு வழங்கி உள்ளனர். மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு, தேசியவாத காங்கிரஸ் கட்சி சுப்ரியா சுலே உள்ளிட்டோர் கையெழுத்திட்ட இந்த மனு மக்களவை சபாநாயகரிடம் வழங்கப்பட்டது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் நாடு முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது என்றும் நேர்மையான தேர்தல் நடைமுறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

## 25% வரி + அபராதம்; 'செத்த பொருளாதாரம்' என்றும் இழிவுப்பேச்சு

# அவமானப்படுத்திய டிரம்ப்; அம்பலப்பட்ட மோடி அரசு!



- **இந்திய ஜவுளி ஏற்றுமதியில் அமெரிக்கா 28% பங்கு வகிக்கிறது**
- **இந்திய நகை ஏற்றுமதியில் அமெரிக்கா 30% (10 பில்லியன் டாலர்) பங்கு**
- **இந்திய மொபைல் போன் ஏற்றுமதி : 12 பில்லியன் டாலர் மதிப்பு**
- **அமெரிக்க பொருட்களுக்கு இந்தியா விதிக்கும் சராசரி வரி : 15.9%**
- **இந்திய புகையிலை மீது அமெரிக்கா விதிக்கும் அதிகபட்ச வரி : 350%**
- **ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அமெரிக்க வரி : 15%**
- **பிரிட்டனுக்கு அமெரிக்க வரி : 10%**
- **இந்தியாவுக்கு அமெரிக்க வரி : 25% + அபராதம்**
- **இதனால் ஜிடிபி-யில் எதிர்பார்க்கப்படும் குறைவு : 0.2 - 0.5%**

நன்றி
**தீக்கதிர்**
1.8.2025



இராணிப்பேட்டை நகராட்சி வார்டு 18 பள்ளித் தெருவில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையம் கட்டடத்தை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெ.யு.சந்திரகலா, நகரமன்றத் தலைவர் சுஜாதா வினோத், துணைத் தலைவர் ரமேஷ் கர்ணா, நகரச் செயலாளர் பி.பூங்காவனம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத், நகர இளைஞர் அணி அமைப்பாளர் இசட்.அஜ்மல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.